நல்லூர் ... யாழ்ப்பாணம்

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 13 ஞாயிற்றுக்கிழமை (27-06-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 211

### தடை நீக்கப்பட்ட பொருள்களின்

# குடாநாட்டின் மாதாந்தத் தேவை வீரசேகராவிடம் இன்று கையளிப்பு

## பேச்சுக்கள் மேலும் தொடரும்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு மாதாந்தம் தேவைப்படும் தடை நீக்கப்பட்ட பொருள்களின் அளவுகளின் விவரம், ஜனாதிபதியின் தூதுவர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவிடம் இன்று விடுதலைப் புலிகளால் கையளிக்கப்படும்.

இதே வேளை, நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பிரிகேடியர் வீரசேகராவுக்கும் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும் இடையில் மாலையில் சுமார் இரண்டு மணி நேரம் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. அந்தப் பேச்சுவார்த்தையின் முடிவுகள் எதுவும் இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை உத்தியோகபூர்வமாக வெளியிடப் படவில்லை.

விடுதலைப் புலிகளின் காவலில் இருக்கும் யுத்தக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக ஏற்பட்டுள்ள உடன்பாட்டைத் தொடர்ந்து அரசினால் தடைநீக்கம் செய்யப்பட்டுள்ள பொருள்களின் தேவை குறித்த பட்டியலை இன்றைய சந்திப்பின்போது விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் பிரிகேடியர் வீரசேகராவிடம் கையளிப்பர்.

யாழ் மாவட்டத்தில் உள்ள பல்வேறு திணைக்களங்கள், வைத்தியசாலைகள், கூட்டுத்தாபனங்கள், வங்கிகள் உட்பட பலதரப்பாரிடம் இருந்தும் அவர்களின் தேவைகள் தொடர்பாகப் பெறப்பட்ட பொருள்களின் விவரங்கள் ஏற்கனவே செயலகத்தில் கடந்த புதன்கிழமை நடந்த மாநாட்டின் பின்னர் தயாரிக்கப்பட்டிருந்தது.

இதே வேளை பொருளாதாரத் தடை நீக்கம் தொடர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்றாவது தடவையாக பிரிகேடியர் யாழ். வந்தார்

ஜனாதிபதியின் தூதுவர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா நேற்று மூன்றாவது தடவையாக யாழ்ப்பாணம் வந்தார்.

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு பயணமான பிரிகேடியர் வீரசேகரா பொருளாதாரத் தடை நீக்கப்பட்ட பொருள்களை வடபகுதிக்கு அனுப்புதல், விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ளவர்களை விடுவித்துக் கூட்டிச் செல்லுதல் என்பன குறித்து கொழும்பில் உயர் அதிகாரிகளுடனும், ரச தலைவர்களுடனும் பேச்சுக்கள் நடத்தினார்.

கொழும்பில் எடுக்கப்பட்ட முடிவுகளுடன், அவற்றின் அடிப்படையில் பேச்சு நடத்துமுகமாக நேற்றுக் காலை 8 மணியளவில் பருத்தித்துறை வந்துசேர்ந்தார். அவருடன் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரும் கூட வந்தார். பலாலியில் இருந்து குமணவிலேயே அவர்கள் பருத்தித்துறை வந்தடைந்தனர்.

அவர்கள் இருவரையும் விடுதலைப்புலிகள் பிரமுகர்கள் அங்கு வைத்து வரவேற்றனர்.

(அ-87-5-15)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 27

கிளிநொச்சியில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற விபத்து ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான நித்தியானந்தன் (கந்தசாமி தர்மலிங்கம்—புதுக்குடியிருப்பு) என்பவர் வீரச்சாவடைந்தார். (ஒ-5)

### பெற்றோல், டீசல், பசளையுடன்

# 'ருகுணு' இன்று புறப்பாடு; மழையால் வரவு தாமதம்

### வாதுவ' கப்பல் இன்று வந்து சேரும்

யாழ்ப்பாணம், ஜூன் 27

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 'வாதுவ' கப்பல் இன்று பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேசமயம்—

முன்னர் அறிவிக்கப்பட்டது போல் 'ருகுணு' கப்பல் இங்கு வருவதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாக நேற்றுக் காலை இங்கு வந்த யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

தடை நீக்கப்பட்ட பொருள்கள் 'ருகுணு' கப்பலில் ஏற்றப்பட்டு வருவதாகவும், கொழும்பில் கடும்மழை காரணமாக, கப்பலில் பொருள்களை ஏற்றும் வேலைகள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை வானொலிச் செய்தியில், 'ருகுணு' கப்பலில் பெற்றோல், டீசல், பசளை, தேங்காய் எண்ணெய், அப்பியாசக் கொப்பிகள், தீப்பெட்டி மற்றும் அரிசி, சீனி போன்ற

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வாகரையில் புதிதாக ஏழு படை முகாம்கள்

### இரவில் மக்கள் நடமாடத் தடை

யாழ்ப்பாணம், ஜூன் 27

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பகுதியில் படையினர் புதிதாக ஏழு முகாம்களை அமைத்துள்ளனர்.

நீண்ட நாட்களாக அப் பகுதியை ஆக்கிரமித்திருக்கும் இராணுவத்தினர் அங்குள்ள கதிரவெளி, வம்பிவெட்டுவான், வாகரை, பனிச்சங்கேணி, கிரிமிச்சை, மாங்கேணி, காயங்கேணி ஆகிய இடங்களில் புதிதாக முகாம்களை அமைத்துள்ளனர்.

வாகரையில் உள்ள வைத்தியசாலை ஒன்றிலும், காயங்கேணியில் சரஸ்வதி வித்தியாலயத்திலும் வம்பிவெட்டுவானில் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையிலும் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

காயங்கேணியில் தடை முகாம் ஒன்றையும் படையினர் அமைத்துள்ளனர்.

புதிதாக முகாம் அமைக்கப்பட்ட பகுதிகளில் இரவு 7 30 மணிக்குப் பின் பொது மக்கள் நடமாட்டத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. கடலில் மீன்பிடிப்பதும் அங்கு தடை செய்யப்பட்டுள்ளது.

கிழக்குக் கரை வாவியில் குறிப்பிட்ட நேரத்துக்கு மட்டும் மீன்பிடித் தொழில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் மோதல்கள்

கொழும்பு, ஜூன் 27

மட்டக்களப்பு மாவட்டத்தில் சில இடங்களில் கடந்த இரு தினங்களில் மோதல்கள் இடம்பெற்றுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

இதே சமயம் கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்று இராணுவம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பில் இடம்பெற்ற மோதல்களில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து விரிவான தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

ஸ்ரீலங்கா படையினருக்கு இழப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. விடுதலைப் புலிகள் தரப்பில் சிலர் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

## நரசிம்மராவ் தமது பலத்தை நிரூபிப்பதற்கு முயற்சி

### போபாலில் நேற்று பேரணி, கூட்டம்

புதுடில்லி, ஜூன் 27

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் மீதான லஞ்சக் குற்றச்சாட்டின் பின்னர் நேற்று மத்திய பிரதேசத்தின் தலைநகர் போபாலில் பேரணி ஒன்று இடம்பெற்றது. நரசிம்மராவ் தலைமையில் இடம்பெற்ற இந்தப் பேரணி மூலம் தமது பலத்தை நிரூபிக்க அவர் முயற்சி செய்து வருகிறார் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

நரசிம்மராவ் பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரி வரும் இவ்வேளையில் பேரணி ஒன்றை நடத்த முயற்சித்தது முக்கியத்துவமிக்க நிகழ்ச்சி என்றும் தெரிவிக்கப்பட்டது.

போபால் நகரில் நேற்று பொதுக் கூட்டமும் இடம்பெற்றது. கடந்த சில தினங்களாக பொது வைபவங்களில் கலந்து கொள்ளாமல் இருந்த ராவ் நேற்றே முதல் முறையாக மக்கள் முன்னிலையில் தோன்றினார் என்று தெரிவிக்கப்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனை பொலீஸ்நிலையம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

வாழைச்சேனைப் பகுதியில் புதிதாக பொலீஸ் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள பேய்த்தாழை என்னும் இடத்தில் அந்தப் பொலீஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1993 - 07 - 28 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

தற்காலிக போதனாசிரியர் (கணனிப் பகுதி)

சம்பள அளவுத்திட்டம்:

தற்காலிக போதனாசிரியர் (கணனிப் பகுதி):- 1993 - 12 - 31ஆம் திகதி வரை ரூபா 3,737.50 (நிலையானது) மாதமொன்றிற்கு.

1994-01-01இல் இருந்து ரூபா 4,225/- (நிலையானது) மாதமொன்றிற்கு.

[பரீட்சைப் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்போருக்கு அவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படும்வரை ரூபா 3,540/- (நிலையானது) மாதச் சம்பளத்தில் வைக்கப்படுவர்]

தகைமைகள்:

பட்டதாரி அல்லது பட்ட இறுதித் தேர்வுக்குத் தோற்றிப் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்பவர்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- நிதிக்கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழக தாபனக்கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளர் கந்தோரில் இருந்து பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல்வேண்டும். படிவங்களையும் ஏனைய விவரங்களையும் தபால்மூலம் பெற விருப்புவோர் ரூபா 20/ காசுக்கட்டளை/ தபாற்கட்டளையை 23x 10 ச மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப் பெற்ற கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

— பதிவாளர்.
யாழ்ப்பாணப்-
பல்கலைக்கழகம்.
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993-06-24.

(சி-5408)


# இலங்கை அரசு - புலிகள் உடன் யுத்த நிறுத்தம்

## பாரதீய ஜனதாக் கட்சி ஆலோசனை

மணிலா, ஜூன் 27

இலங்கை இனப்பிரச்சினை குறித்து இந்தியாவின் முக்கிய எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சி கருத்து வெளியிட்டுள்ளது

பாரதீய ஜனதாக் கட்சியின் துணைத் தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி இனப்பிரச்சினையை எவ்வாறு தீர்க்கலாம் என்பது குறித்து சில யோசனைகளைத் தெரிவித்துள்ளார்.

'வெரித்தாஸ்' வானொலியில் நேற்று இலங்கை இனப்பிரச்சினை குறித்து ''உண்மையின் எண்ணங்கள்'' ஒலிபரப்பில் இந்த யோசனைகளும் வெளியிடப்பட்டன.

ஜனா கிருஷ்ணமூர்த்தியின் யோசனைகள் வருமாறு—

★ விடுதலைப் புலிகளும் அரசுப்படையும் உடனடியாக போர் நிறுத்தத்திற்கு சம்மதம் தெரிவித்து, போர் நிறுத்தம் அறிவிக்கப்படவேண்டும்.

★ போர் நிறுத்தம் அமுல்படுத்தப்படும்தினத்தன்று இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இராணுவமும் புலிகளின் கட்டுப்பாடடுப் பகுதியில் புலிகளும் எவரெவர் எந்நிலையில் இருக்கிறார்களோ அவரவர் அந்நிலையிலேயே இருப்பர் என்பதை இரு தரப்பினரும் ஏற்க வேண்டும்.

★ புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டே சமாதான தீர்வுக்கு வரவேண்டும் என்ற நிபந்தனையை இலங்கை அரசு வற்புறுத்தக் கூடாது.

★ இதன் பிறகு விரைவில் ஒரு வட்டமேசை மாநாடு கூட்டப்பட வேண்டும். தமிழர் பிரதிநிதிகளில் புலிகளுக்கு பிரதான இடம் அளிக்கப்பட வேண்டும் ஏனைய போராளிக்குழுக்களின் பிரதிநிதிகள், தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அழைக்கப்பட வேண்டும்.

★ சிங்கள பௌத்த குழுக்கள், பிரதான அரசியல் கட்சிகள் மற்றும் அரசின் முக்கிய தலைவர்கள் இந்த வட்டமேசை மாநாட்டில் பங்குபற்ற வேண்டும்.

★ தமிழர், சிங்களவர், பௌத்தர் என பாகுபாடு பாராது அனைவருக்கும் சம உரிமை, சமவாய்ப்புக்கள், சம அந்தஸ்து, சமநீதி கிடைக்கும் வகையில் அனைவரும் சேர்ந்து சகோதர உணர்வுடன் கூட்டு முயற்சியினால் இலங்கையில் ஒற்றுமை, ஒருமைப்பாடு வளங்காண தக்கதோர் அரசு அமைப்பையும், பாதுகாப்புக்களையும் உருவாக்க முன்வர வேண்டும்.

★ இலங்கையின்ஒரே அரசு என்பதில் இருந்து மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்களும் மத்திய அரசுக்கு குறிப்பிட்ட அதிகாரங்களும் என்பது வரை இந்த வட்டமேசை மாநாட்டில் விவாதிக்கலாம்.

இவ்வாறு சில யோசனைகள் தெரிவிக்கப்பட்டன. (ஒ)

# வர்த்தகர்களுக்கும் மரணக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜூன் 27

வட்பிராந்திய வர்த்தகர் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் வர்த்தகர்களுக்கான மரணக் கொடுப்பனவுத் திட்டம் விரைவில் அமுல் செய்யப்படவுள்ளது.

இதன்படி அங்கத்தவரின் குடும்பத்தவர் இறந்தால் ரூபா 10 ஆயிரமும், அங்கத்தவர் இறந்தால் ரூபா 50 ஆயிரமும் மரணக் கொடுப்பனவாக வழங்கப்படும்.

கடந்த மே 29ஆம் திகதி நடந்த யாழ் மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சமாசக் கூட்டத்தில் இதற்கான ஆலோசனை முன்வைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (த-162]

# வாழ்க்கை செலவு அதிகரிப்பு வர்த்தக ஊழியர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு ஏற்ப வர்த்தக ஊழியருக்கு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்று யாழ். வர்த்தக ஊழியர் சங்கம் கோரி உள்ளது.

தனியார் வர்த்தகர்களைக் கோரும் இது தொடர்பான தீர்மானம் ஒன்றை யாழ். வர்த்தக ஊழியர் சங்கம் நிறைவேற்றி உள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள தனியார் வர்த்தகர்கள் தமது ஊழியர்களுக்கு 300 ரூபா சம்பள உயர்வு வழங்க வேண்டும் என்று தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது (இ-3)

# திருக்கேதீஸ்வர மான்மியம் தொன்மம் கூறும் நூல்

## நூல் வெளியீட்டு விழாவில் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 27

''ஈழத்து வரலாற்றை அடிநாதமாகவும் சமயத்தைப் பின்னணியாகவும் திருக்கேதீஸ்வரத்தை மையமாகவும் கொண்ட இந்த மான்மியம் ஈழத்தில் எழுந்த தொன்மம் கூறும் நூல்களில் சிறப்புடைய ஒன்றாகும்''.

ஏழாலைப் பண்டிதர் திரு. மு. கந்தையா எழுதிய திருக்கேதீஸ்வரமான்மியம் -2 நூல் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்த பேராசிரியர் அ. சண்முகதாஸ் இவ்வாறு கூறினார்.

நூல் வெளியீடு அண்மையில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்றது

பேராசிரியர் சண்முகதாஸ் மேலும் பேசுகையில் கூறியதாவது;

''இந்த நூல் சம்பந்தர், சுந்தரர் பாடல்களையும் ராஜராஜனின் வரலாற்றையும் இணைத்து சிறந்த நடையில் உருவாக்கப்பட்டுள்ளது.

''இன்று நாம் அங்கே செல்லமுடியாத நிலைமையில் இந்த நூலினூடாக திருக்கேதீஸ்வரத்தின் மகிமையைக் காண்கின்றோம்'' என்றார்.

யாழ் பல்கலைக் கழக வரலாற்றுத்துறைத் தலைவர் திரு க. சிற்றம்பலம் விழாவில் உரைநிகழ்த்தியபோது;

''தமிழறிவு மட்டுமன்றித் தத்துவ அறிவும் கிரியைகள் அறிவும் கொண்டு [illegible] பட்ட இந்நூல் பௌத்தவரலாற்றுச் சேவை போன்று ஒரு நூல் எம்மிடையே இல்லை என்ற குறையை நீக்குகின்றது'' என்று குறிப்பிட்டார்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி கோபாலகிருஷ்ணன் பேசும்போது கூறியதாவது;

இந்நூல் வேத உணர்வின் சிந்தனையை வைதிக மரபின் ஊடே இணைத்துக் காட்டுவதில் முக்கிய தத்துவக் கருவாகவும் வரலாற்றைத் தெளிவுபடுத்தும் ஆய்வு நூலாகவும் விளங்குகின்றது என்று கூறினார்.

திருவாளர்கள் ச. விநாயகமூர்த்தி, ஈ. நமசிவாயதேசிகர், சு இராசநாயகம், ப கணேசலிங்கம், நூலாசிரியர் கந்தையா ஆகியோரும் பேசினார்கள்.

பண்டிதர் க. உமாமகேஸ்வரன் நூலை வெளியிட்டு உரையாற்றினார். சமஸ்கிருதத்துறை விரிவுரையாளர் சிவசாமி முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார். (க-111)

# இலக்கிய விழா இறுதி நாள் நிகழ்வுகள்

குருநகர், ஜூன் 27

திருமறைக் கலாமன்றம் நடத்தும் இலக்கிய விழாவின் இறுதி நிகழ்ச்சிகள் இன்று ஞாயிறு மாலை 5-30 மணிக்கு பிரதான வீதி மன்ற அரங்கில் நடைபெறும்

நிகழ்ச்சிகளுக்கு மன்ற இயக்குநர் பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகள் தலைமை வகிப்பார் இன்றைய தினம் பேராசிரியர் கா. சிவத்தம்பி பொன்னாடை போர்த்து கௌரவிக்கப்படுவார்.

முதலில் நடைபெறும். கவிதை அரங்கில் வாகரைவாணன், காரை சுந்தரம்பிள்ளை, சோ. பத்மநாதன் ஆகியோர் பங்குபற்றுவர் அதன் பின் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் நடக்கும் கருத்தரங்கில் கலாநிதி சோ. கிருஷ்ணராஜா, எஸ். ஜே வி. சந்திரகாந்தன் அடிகள் ஆகியோர் கலந்து கொள்வர்.

இறுதி நிகழ்ச்சியாக ''இலங்கையர் கோன் விளக்கு'' என்னும் நடன நாடகம் இடம்பெறும். (த-க-51)

# இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 27

அரியாலை கலைவாணி சனசமூக நிலையத்தின் 29 ஆவது ஆண்டு விழாவும் சந்தோசம் இளைஞர் மன்றத்தின் வருடாந்த விளையாட்டு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும். (இ-17)

o o o

யாழ்ப்பாணம், ஜூன் 27

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் நடத்தப்பட்ட தையல் பயிற்சியில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (இ)

# கொழும்பு செல்லும் நோயாளருக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 27

கொழும்புக்கு வைத்திய சிகிச்சைக்காக தெரிவு செய்யப்பட்ட நோயாளிகளும் அவர்களுடன் கூடச் செல்பவர்களும் எதிர்வரும் புதன்கிழமை 30 ஆம் திகதி காலை 7 மணிக்கு யாழ் ஆஸ்பத்திரியில் சமூகமளிக்குமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார்.

சம்பந்தப்பட்டவர்கள் இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு, தண்ணீருடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-17-51)

# கூட்டம் ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 27

கிழக்கில் நடத்தவிருக்கும் உத்தேச சர்வசன வாக்கெடுப்பு பற்றி இன்று ஞாயிறு கொழும்பில் நடைபெறவிருந்த முஸ்லிம் எம்பிக்களின் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

# விவசாயிகளுக்கு மண்எண்ணெய்

வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவில் பயறு, கௌப்பி, குரக்கன் போன்ற சிறுதானியப்பயிர்ச் செய்கை பண்ணும் விவசாயிக்கு கட்டுப்பாட்டு விலையில் நீர்ப்பாசனத்துக்கு வேண்டிய மண்எண்ணெய் கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வருகின்றது

மேற்படி சிறுதானிய பயிர்கள் விதைக்கப்பட்டதும் ஐந்து பரப்புக் காணிக்கு ஆரம்ப கட்டமாக மூன்றரை லீட்டர் மண் எண்ணெய் முதலில் வழங்கப்படும். பின்னர் காலத்துக்கேற்ப பன்னிரெண்டு தடவைகளுக்கு இரண்டரை லீட்டர் மண்எண்ணெய் வீதம் வழங்கப்பட்டு வருகின்றது [த-152]


## இடமாற்றம்

Dr. கணேஸ் அவர்களின் தீவக கமலா வைத்தியசாலை நோயாளர்களின் நன்மை கருதி இல. 651 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில் [பூநாறி மரத்தடி] இயங்குகிறது

— இரவு - பகல் சேவை —

(26263)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களில்

# மே மாதத்தில் 1,183 பேர் மலேரியாவினால் பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்கள் உட்பட வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பகுதிகளில் கடந்த மே மாதத்தில் மட்டும் ஆயிரத்து 183 பேர் மலேரியாவினால் பாதிக்கப்பட்டனர் என்றும்—

அவர்களில் 83 பேர் மூளை மலேரியாவினாலும் ஆயிரத்து 96 பேர் சாதாரண மலேரியாவினாலும் பாதிக்கப்பட்டனர் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் மட்டும் இதே காலப்பகுதியில் 75 பேர் மூளை மலேரியாவினாலும், 848 பேர் சாதாரண மலேரியாவினாலும் பாதிக்கப்பட்டனர். பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலேயே மிகவும் கூடுதலாக 396 பேர் மலேரியாவினால் பாதிக்கப்பட்டனர்.

இதேவேளை—

யாழ். மாவட்ட மலேரியா தடுப்பு இயக்கத்தினரிடம் மலத்தியோன் மருந்து கையிருப்பு முடிவடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் 30 கிலோகிராம் கொண்ட 65 பெட்டிகள் இங்கு எடுத்துவரப்பட்டன. ஆனால் யாழ் மாவட்டத்தின் தேவைக்கு 125 பெட்டிகள் தேவை என்றும் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு மாதாந்தம் 200 பெட்டிகள் மலத்தியோன் தரைமார்க்கமாக தற்போது எடுத்து வரப்படுவது குறிப்பிடத்தக்கது. (த-163)

## கருத்தரங்கு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையினால் நடத்தப்படும் பத்திரிகையாளர் பயிற்சி பெற்றவர்களுக்கும், தற்போது பயிற்சி பெறுபவர்களுக்குமான கருத்தரங்கு ஒன்று நாளை திங்கள் பிற்பகல் 4 மணிக்கு கிளைத் தலைமையகத்தில் நடைபெறும். (த)

## ஆலய உற்சவங்கள்

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தின் புதிய கைலாயவாகனம் வெள்ளோட்டம் நாளை திங்கட்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும். மறுநாள் கைலாயவாகன உற்சவம் இடம்பெறும்

o o o

நவாலி குளத்தடி ஸ்ரீஞானவைரவர் கோவில் அலங்கார உற்சவம் நாளை திங்கட்கிழமை முதல் ஜூலை 7 ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறும். தினமும் மாலை 4-30 மணிக்கு அபிஷேகமும் தொடர்ந்து பூசையும் சுவாமி வீதி வலம் வருதலும் இடம்பெறும். ஜூலை 7 ஆம் திகதி காலை 9 மணிக்கு நவோத்தர சத சங்காபிஷேகமும் பூசையும் மாலை 3 மணிக்கு பொங்கலும் இடம்பெறும். (க)

o o o

சிறுப்பிட்டி தனங்கலட்டிப்பதி செல்லப்பிள்ளையார் ஆலய மண்டலாபிஷேகத்தை முன்னிட்டு தினமும் பிரம்மஸ்ரீ ச. ஈஸ்வரசர்மா நிகழ்த்தும் தெய்வீகப் பேருரைகளில் நாளை திங்கள் ''தபோதனர் டசி'' எனும் பொருளிலும் மறுநாள் செவ்வாய் ''மாது சொன்ன சூள்'' எனும் பொருளிலுமான உரைகள் இடம்பெறும். (க)

o o o

கச்சாய் புனித இராயப்பர் தேவாலய நவநாள் உற்சவத்தில் நாளை திங்கட்கிழமை திருநற்கருணை ஆராதனையும், திருப்பலி பூசையும் இடம்பெற்று, மறுநாள் செவ்வாய் காலை திருநாட்பலி பூஜையும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

28 ஆம் திகதி இரவு 'மானம் காத்த மங்கை' என்னும் வரலாற்று நாடகமும் இடம்பெறும். (க-117)

## பாடசாலைகளில்

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடி காமாட்சி பாலர் பாடசாலை இரண்டாவது வருடாந்த தடகள விளையாட்டு விழா இன்று ஞாயிறு பிற்பகல் 1மணிக்கு பாடசாலை ஆசிரியை செல்வி க. லிங்கேஸ்வரி தலைமையில் காமாட்சி அம்பாள் (நாச்சிமார்) கோவில் வீதியில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக கலாநிதி க. கனகராசாவும் சிறப்பு விருந்தினராக, ரெட்பானா ஸ்தாபன உதவிப் பயிற்சியாளர் திருமதி ஒலி வெற்ஜெனோவா அல்பிரட்டும் கலந்துகொள்வர். (த 69)

## போட்டிகள்

சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது சங்க மட்டத்தில் கிளை ரீதியாகப் போட்டிகளை நடத்தி வருகின்றது.

வியாபாரச் சுழற்சி உட்பட 16 அம்சங்கள் அவதானிக்கப்பட்டு சிறந்த மூன்று கிளைகளுக்குப் பரிசு வழங்கப்பட உள்ளது. (த-154)

# மாங்குளம் மக்கள் வங்கி மீண்டும் பழைய இடத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 27

மாங்குளம் மக்கள் வங்கிக் கிளை மீண்டும் மாங்குளத்தில் அடுத்த மாதம் முதல் இயங்கவிருக்கிறது.

மேற்கண்ட தகவலை மக்கள் வங்கி வடபிரதேச முகாமையாளர் திரு. எஸ். அருளானந்தம் தெரிவித்தார்.

தற்சமயம் துணுக்காயில் இயங்கும் இந்தக் கிளையை மீண்டும் மாங்குளத்தில் இயங்க வைக்க கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளதாகவும்—

வங்கிக்கு தேவையான காகிதாதிகள், அலுவலக உபகரணங்கள் கொழும்பில் இருந்து எடுத்து வரப்படவிருப்பதாகவும்—அவர் மேலும் தெரிவித்தார். (த-3)

# 'நரோமா' திருமலை சென்றது

யாழ்ப்பாணம், ஜூன் 27

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள யுத்தக்கைதிகளின் உறவினர்களை திருகோணமலையில் இருந்து அழைத்துவருவதற்காக செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவால் வாடகைக்கு அமர்த்தப்பட்டிருந்த 'நரோமா' கப்பல் நேற்று முன்தினம் திருகோணமலைக்கு திரும்பியது.

கடந்த 18ஆம் திகதி திருகோணமலையில் இருந்து யுத்தக்கைதிகளின் உறவினர்களை அழைத்து வருவதற்காகவும்—

மீண்டும் அவர்களை திருகோணமலைக்கு கூட்டிச் செல்லவும்— இக்கப்பலை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஒழுங்கு செய்திருந்தது.

இதுவரை காலமும் காங்கேசன் துறையில் தரித்து நின்ற இக்கப்பல் நேற்று முன்தினம் பருத்தித்துறைக்கு வந்து கொழும்பு செல்லும் யாழ். போதனா வைத்திய சாலை டாக்டர்களுடன் திருமலை நோக்கிச் சென்றது. (த-3)

# ஆஸ்பத்திரிப் பாவனைக்கு நவீன படப்பிடிப்புக் கருவி

இரப்பை உட்பட வயிற்றில் ஏற்படும் நோய்களைக் கண்டு பிடிப்பதற்குப் பாவிக்கப்படும் நவீன எக்ஸ்றே படப்பிடிப்பு இயந்திரம் (Gastroscopy) யாழ். போதனா வைத்திய சாலையின் பாவனைக்கென அண்மையில் இங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரத்தை இயக்குவதற்குப் பயிற்சி பெற்றவர்கள் வைத்தியசாலையில் இல்லை என்றும்— எனவே இதற்கான பயிற்சியைப் பெற வைத்தியசாலையைச் சேர்ந்த இரண்டு தாதிகள் கொழும்பு ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களுக்கு இரண்டு வார பயிற்சி அளிக்கப்படும், இதற்கான ஏற்பாடுகளை யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் மேற்கொண்டுள்ளது. (த-17)


பாலர் கல்விக்கழக

**வளர்மதி பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி**

இடம்: யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரி
காலம்: 27 — 06 — 1993 (இன்று)
பிற்பகல் 1-00 மணி

தலைமை: செல்வி நித்தியலட்சுமி பொன்னையா
(வளர்மதி பாலர் பாடசாலை ஆசிரியை)

வரவேற்புரை: செல்வி தி. மீனலோஜினி
(பாலர் பாடசாலை ஆசிரியை)

முதன்மை விருந்தினர்:
திரு. ஐ. துரைராஜா
(அதிபர், யா/நாவலர் ம. வி.)

சிறப்பு விருந்தினர்:
திரு. எஸ். கே. சண்முகலிங்கம்
(வண். தெற்கு கோத்தணி உதவியாளர், புங்குடுதீவு, நயினாதீவு ப.நோ.கூ.ச. நெறியாளர்)

கௌரவ விருந்தினர்:
திரு. செந்தமிழன் — திரு. குட்டி
(தமிழீழ விடுதலைப் புலிகள்)

பரிசில் வழங்கல்:
திருமதி கௌ. துரைராஜா
(ஆசிரியை, யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரி)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

பாலர் பாடசாலை ஆசிரியைகள்,
மாணவர்கள், பெற்றோர்கள்.

15 பாலர் பாடசாலைகள் பங்கு கொள்ளும் பாலர் கல்விக்கழகத்தின் 22ஆவது வருடாந்த விளையாட்டுப் போட்டி யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் 01 - 08 - 1993 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1-30 மணியளவில் இடம்பெறும்.

விளம்பர அன்பளிப்பு:
புங்குடுதீவு, நயினாதீவு
ப. நோ. கூ. சங்கம்
(சி-5334)


வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள

# பாடசாலை அபிவிருத்தியை அரசு புறக்கணிக்கின்றது

## கல்விப் பணிப்பாளர் சொல்கிறார்

தென்மராட்சி ஜூன் 27

வடக்கு-கிழக்குப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளின் அபிவிருத்திப் பணிகளை அரசாங்கம் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் புறக்கணித்து வருகிறது.

தென்மராட்சிப் பகுதியில் பிறந்துள்ள இந்தத் தேசிய பாடசாலையை ஒரு போஷாக்குள்ள கல்லூரியாக மாற்ற வேண்டிய பணி தென்மராட்சிப் பகுதி மக்களையும் இப்பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறையுள்ள நலன் விரும்பிகளையுமே சாரும்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற சாவகச்சேரி இந்து தேசிய பாடசாலையின் தேசிய விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பேசும்போது வடமாநில கல்விப் பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் இவ்வாறு சொன்னார்.

அவர் மேலும் கூறியதாவது:

இன்றைய மாணவர்கள் தமிழினத்தின் தன்னின தேசப்பற்றுடன் பண்பாடு, சுதந்திர உணர்வு, பிறரை மதிக்கும் தன்மை இவற்றுடன் வாழப் பழகுவதுடன் ஆங்கிலக் கல்விக்கும் முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்றார்.

விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி தமது உரையில் கூறியதாவது;

மாணவர்களின் கல்வி வளம் கருதி அண்மையில் கைதிகள் பரிமாற்றம் சம்பந்தமான பேச்சு வார்த்தையில் மாணவர்களுக்குத் தேவையான உபகரணங்களை தடையின்றி வழங்கவேண்டுமென கேட்டிருந்தோம். பாடசாலை உபகரணங்களுக்கான தடை நீக்கப்பட்டுள்ளதால் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பாடசாலைகளுக்குத் தேவையான உபகரணங்களை (கம்யூட்டர் உட்பட) பெற்றுக் கொள்ள யாழ். மாவட்ட கல்வி அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளையும், முயற்சியையும் மேற்கொள்ள வேண்டும் என்றார்.

சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளர் த. நவரத்தினராசா உரையாற்றுகையில் கூறியதாவது;

தமிழ் மாணவர்களின் கல்வியை நசுக்க அரசாங்கம் பல வழிகளில் செயல்பட்டது அரசாங்கம் இடைகளில் பல போட்ட போதும் அவைகளை உடைத்தெறிந்து இக்கல்லூரி மாணவர்களின் சாதனைகளே இன்று தேசிய தரத்தையடைய வைத்தன. இந்தத் தேசிய தர உயர்வு தென்மராட்சிப் பகுதி மக்கள் அனைவரையும் சாரும் என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் சிவஸ்ரீ சி. சோமசுந்தரக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

தென்மராட்சி கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் பொ. வீரபத்திரன், தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை, தென்மராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் கந்தண்ணா உட்பட பலர் உரையாற்றினர்.

விழா முடிவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (த-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அழகிய பொமனேரியன் வெள்ளை நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல 48/1, முதலாம் ஒழுங்கை (ஐங்கரன் விளையாட்டுக் கழக வீதி), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (26251)

இரண்டு கிறைண்டர்களும் ஒரு நம். 7 அல்லரும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல: 18, கொண்டலடி லேன், நல்லூர். (26255)

### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வியாபாரி மூலை கடற்கரை வீதியில் கொற்றங்சடலை தெணி வடக்கு கடல் தொழில் காணியும், தெற்கில் தென்னை மரக் காணியும் 4 (நாலு) பரப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ சிவகுருவள்ளி ளவு வியாபாரிமூலை, பருத்தித்துறை. (26220)

ஊரெழு வடக்கில் பதினேழரை பரப்பு தோட்டக்காணி, வற்றாத கிணறும். தென்னை மரங்களும் உண்டு. பலாலி வீதி, 1ஆம் ஒழுங்கையில் தோட்டம் வரை லொறி செல்லக்கூடிய அகன்ற வீதி. விவரங்களுக்கு எழுதவும்; இல. 534, மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (26247)

தெற்குப் புன்னாலைக்கட்டுவன் - சுன்னாகம் வீதியின் 4ஆவது மைல் கட்டை வய அண்மித்து வீதிக்கரையான ஒன்பதரை 9½) பரப்பு வெறும் காணி. விவரங்களுக்கு எழுதவும். இல. 535, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (26248)

### மாற்றம்

இதுவரை காலமாக 32, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த புனிதா நகை மாளிகை 04-06-1993 முதல் 239, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (6245)

### புலமைப்பரிசில்

ஆண்டு - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ் மொழியில் உச்சப்புள்ளி பெற உதவும் ஒரேயொரு நூல் ''புலமைப்பரிசில் - மொழித் தேர்ச்சி'' அனைத்து வகை வினாக்களும் அடங்கியது. எங்கும் கிடைக்கும். (6294)

### மணமகள் தேவை

பிரான்ஸில் தொழில்புரியும் 34 வயது, சித்திரை 2ஆம் பாதம் மணமகனுக்கு உடனடியாக மணமகள் தேடுகிறார்கள். கொழும்பில் வந்து மண விழா நடத்தமுடியும். மணமகள் பிரான்ஸ் செல்லவேண்டும். சீதனம் அதிகம் எதிர்பார்க்கப்படவில்லை. பொருத்தமான குறிப்புடன் உடன் விண்ணப்பிக்கவும். இல. 533, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [26208]

### O/L கணிதம்

Distinction பெறுபேறடைய இதுவரையும் சித்தி அடையாதவர்களும் ஆண்டுகள் 9, 10 உட்பட கற்பிக்கப்படுவர். B. Sc. (Cey.) ஆசிரியரால். இல: 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (26256]

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்களுக்கு உடன் விடை கிடைக்கும். ஜாதகக் குறிப்பு, கைரேகை, எண் சோதிடம், விவாகப் பொருத்தம் அனைத்துக்கும் தொடர்பு: டாக்டர் த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (26231]

### (O/L) MATHS

புலமைப் பரிசில் வகுப்பில் இருந்து O/L வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 26 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் ஆரம்ப அறிவிலிருந்து Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (26260)

### விஞ்ஞான விளக்கம்

ஆண்டு - 10 பாடத்திட்டத்திலுள்ள பதின்மூன்று அலகுகளுடன் தொடர்பான அனைத்து விஞ்ஞான விளக்கங்களைக் கொண்டது. எங்கும் கிடைக்கும். (6295)

## விதவைகள் ஒய்வூதியம்

மந்திகை, ஜூன் 27

உள்ளூராட்சி திணைக்கள விதவைகள் ஒய்வூதியம் பெறுவோருக்கு, பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் ஒய்வூதியத்துக்குரிய வவுச்சர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (த-87)

ஆண்டு 9, 10, 11
O/L பகல் நேர வகுப்பு
A/L கலை, வர்த்தக விஞ்ஞான
வகுப்புகள் அனைத்திற்கும்
யாழ் நகரில்!
புதியதோர் கல்வி நிறுவனம்
'நவகைடன்ஸ்'
அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (6297)

அளவெட்டி
விநாயகர் விளையாட்டுக் கழக
வளர்ச்சி நிதிக்காக
நடத்தப்படும்
மாபெரும்
மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி
இடம்: சுன்னாகம் - கந்தரோடை
சவாரி மைதானம்
காலம்: 04 — 07 — 1993 பிற்பகல் 2 மணி
(ஞாயிற்றுக்கிழமை)
குறிப்பு: A, B, C ஆகிய மூன்று பிரிவுகளாக நடத்தப்படும்.
★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★
— விநாயகர் விளையாட்டுக் கழகம்.
விளம்பர அன்பளிப்பு:
முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த போதனையில் நீண்டகாலம் தனித்துவம் பெற்று விளங்கும்;
லக்கி கல்வி நிறுவனம்,
அளவெட்டி, சுன்னாகம்.
(இ-5407)

## நினைவஞ்சலி

**33ஆம் ஆண்டு** **3ஆம் ஆண்டு**





அமரர்
**நாகலிங்கம் திருஞானசம்பந்தர்**
(முன்னை நாள் ஆசிரியர், மீசாலை வீரசிங்கம் சைவ வித்தியாசாலை)
தோற்றம்: 22 — 07 — 1913
மறைவு: 02 — 07 — 1960

திருமதி
**திருஞானசம்பந்தர் யோகாம்பிகை**
(இளைப்பாறிய ஆசிரியை, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்)
தோற்றம்: 23 — 08 — 1920
மறைவு: 01 — 07 — 1990

திதி: 27 — 06 — 1993

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

மீசாலை. (சி-5333)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர் கிட்டிணன் வல்லிபுரம்**

தோற்றம்: 11—10—1932 மறைவு: 28—05—1993

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய், உயிர் மூச்சாய் விளங்கினாய். அருமை மகனுடன் ஆனந்தமாகப் பேசி, அன்புக்குரிய மனைவி மக்களையும் பாசங்கொண்ட மழலைச் செல்வங்களைக் காண்பதற்கு ஓடோடி வந்த உன்னை ஓராண்டு ஆவதற்குள் காலன் பிரித்து விட்டானே!

இன்று (27-06-93) ஞாயிறு எமது இல்லத்தில் நடைபெறும் 31ஆம் நாள் நினைவஞ்சலியில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

வே. பரமானந்தம்,
அரசடி,
தொண்டமனாறு. (6296)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### காலத்தின் தேவை: பண்டிதமணிகள்

தமிழ் வளர்த்த தமிழ்த் தாயின் தவப்புதல்வர்களில் தலை சிறந்த பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் தொண்ணூற்று நான்காவது பிறந்த தினம் இன்றாகும். அந்தத் தமிழ் மாமுனிவரை, அவர்தம் பணிகளை இன்று இரு நிகழ்வுகளில் நினைவுகூர ஏற்பாடாகி உள்ளது காலையில் பிறந்த தின விழாவும், மாலையில் நினைவுப் பேருரையும் நடைபெறவுள்ளன. தமிழையும் சைவத்தையும் தமது வாழ்க்கையாக்கி அவற்றின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் உழைத்த பண்டிதமணி ஐயா தமிழர் வாழும் வரை நினைவுகூரப்பட வேண்டியவர்.

தமிழ் உள்ளமும், சமய உணர்வும் கொண்டவர்களுக்கு ஒரு பாடமாக விளங்க வேண்டியவர் பண்டிதமணி. தமிழர்களால் பின்பற்றப்பட வேண்டியவர். கல்விப் போதனையில் அடங்கும் பாடங்களைப்போல பயிலப்பட வேண்டியவர்.

பண்டிதர் ஐயா பன்முகப்பட்ட ஆளுமை உடையவர். அறிஞர்கள் ஒவ்வொருவரும் தத்தமது அபிமானத்துக்கும் ஆற்றலுக்கும் உரிய துறைகளில் நின்று ஆராய்வதற்கு உகந்த தான முழுமை நிறைந்தவர். அவர் ஒரு சிறந்த எழுத்தாளர் அறிவு பரப்பும் அரும்பணி புரிவதில் ஊக்கமுள்ள நல்லாசிரியர். சுவை ததும்பும், ஆழம் செறிந்த, மலர்ச்சி நிறைந்த, தனித்துவ நடை அமைந்த பேச்சாளர். சிறந்த இலக்கிய விமர்சகர். கவிஞர், உரையாசிரியர். சலிப்பில்லாத சுவைஞர். தமிழ் இலக்கணமும் இலக்கியமும் அவரது சிறப்புத் துறைகள்.

ஆங்கில மோகம் தலைவிரித்தாடிய அவரது காலத்தில், கனியிலும் இனிய தமிழ்மொழி புறஞ்செய்யப்பட்ட அக்காலத்தில், நாவலர் வழி நின்று தமிழையும் அதனோடு கூட சைவத்தையும் வளர்ப்பதற்காகவே தன்னை அர்ப்பணித்தவர். தமிழ், சமயம், அவை கூறும் தத்துவம் ஆகியவற்றை நுண்ணியதாக ஆராய்ந்தவர். தாம் ஆராய்ந்து கண்டவற்றை தமது மாணவர்களுக்கு ஊட்டினார் பேச்சுக்கள் மூலம் பொதுமக்களிடமும் அவற்றைப் பரப்பினார். அந்த வகையில் பண்டிதமணி அவர்கள் சைவத் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தை நெடிதோங்க வளர்த்தார்.

அவர் தமது எழுத்துக்களின் மூலமும், பேச்சுக்களின் ஊடாகவும் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் தூதுவனாக விளங்கினார். அது போலவே யாழ்ப்பாணக் கல்வி முறையின் தூதுவராகவும் திகழ்ந்தார். அவரிடம் தமிழ் பயின்ற ஆசிரியர்கள் இந்த நாட்டின் மூலை முடுக்கெல்லாம் தமிழ் பரப்பினார்கள். பண்டிதமணியின் சீடர்களிடம் பயின்ற சீடர்பரம்பரையினரும், தமிழறிவும், தமிழ் ஆர்வமும் மிக்கவர்களாக விளங்குகிறார்கள். ஆகையால் பண்டிதமணி ஒரு தலைமுறையின் சொத்தல்லர். தமிழ்ச் சந்ததிகள் பலவற்றின் சொத்து.

பண்டிதமணி அவர்கள் பழைமைத் தமிழ் பயின்றவராக இருந்த போதிலும், புரட்சிகரமான புதிய சிந்தனைப் போக்குடையவராக விளங்கியவர் என்று விதந்துரைக்கப்பட்டவர். காப்பியங்களிலும், காவியங்களிலும் காணப்பட்ட தவறுகளை சுட்டிக்காட்டி புரட்சிகரமானதும், பகுத்தறிவு தோய்ந்ததுமான கருத்துக்களை துணிகரமாக மேடைகளில் முழங்கியவர்.

மொத்தத்தில் பண்டிதமணி தமிழணங்கு செய்த தவத்தின் பயன் அவர் வாழ்ந்த தலைமுறையின் முதுபெரும் சான்றோன்; மூதறிஞர். ஈழத் தமிழர் வரலாற்றில் ஒரு சகாப்த புருஷர், தமிழாசிரியர் உலகின் அணையா விளக்கு.

ஈழத் தமிழர்களிடம் பொங்கிப் பொலியும் சுதந்திர வேட்கையுடன், தமிழும், தமிழர் கலாசாரமும் மீண்டும் புத்துயிர் பெற்று எழுச்சி கண்டு வரும் காலம் இது. பண்டிதமணியின் பன்முகப்பட்ட புலமையும் ஆளுமையும் ஆராய்ச்சி செய்யப்பட வேண்டிய காலம். தமிழன் வரலாற்றிலே வளர்ச்சியிலே தோன்றியுள்ள மந்தநிலை போக்கப்பட வேண்டிய காலம். அதன் பொருட்டு பலப்பல பண்டிதமணிகள் தோன்ற வேண்டும். வழுவிலாத் தமிழும், சுவைபடு தமிழும், தன்பால் ஈர்க்கும் கவர்ச்சியும், நளினமும், மலர்ச்சியும் மிளிரும் தமிழும் படைத்திட வல்ல பண்டிதமணிகள் காலத்தின் தேவை.

---

இரசாயன உரங்கள், கிருமிநாசனிகளால் ஆபத்து:

# கூட்டுப் பசளையும் வேப்பம் விதையும் பயன்தரவல்ல இயற்கை மாற்றீடுகள்

## பரிசோதனைகள் நிரூபித்துள்ளதாக தகவல்

எமது பிரதேசத்தின் விவசாயச் செய்கையில் இரசாயன உரங்கள், இரசாயன கிருமிநாசனிகள் பயன்படுத்துவதை இயன்றவரை தவிர்க்க வேண்டும். எங்கள் சூழலில் பெறக்கூடிய இயற்கைப் பசளைகளையும், கிருமிநாசனிகளையும் பயன்படுத்தி நல்ல விளைச்சல் காணலாம் என்று பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

குப்பை கூளங்களை கிடங்கில் போட்டு கூட்டுப் பசளை உண்டாக்கலாம். இரசாயன உரங்களைப் போலவே அதுவும் நல்ல விளைச்சல் தரும்.

வேப்பம் விதைகளையும், இலைகளையும் 24 மணித்தியாலங்களுக்கு மேல் தண்ணீரில் ஊற வைத்துத் தெளித்தால் பலவகைக் கிருமிகளை ஒழிக்கலாம்.

உரங்களையும், கிருமிநாசனிகளையும் பயன்படுத்தி விவசாயம் செய்யும் மேலைநாடுகளில் நீல நிறமான வளர்ச்சி குன்றிய பிள்ளைகள் பிறக்கின்றன. அதனால் அங்குள்ளவர்கள் இப்போது இயற்கை உரங்களையும் இயற்கைக் கிருமிநாசனிகளையும் நாடுகிறார்கள். இதனை எமது மக்கள் ஒரு படிப்பினையாகக் கருத வேண்டும்

இவ்வாறு தெரிவித்தார் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம்.

மாத முற்பகுதியில் சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடந்த உலக சூழல் தின விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. சி. தனபாலன் விழாவுக்குத் தலைமை வகித்தார். சூழலுக்கும் அபிவிருத்திக்குமான தென்கிழக்காசிய நிலையத்தின் தலைவரும், ஐ. நா. சங்க யாழ். கிளையின் தலைவரும் ஐ. நா. சபையின் சூழல் பாதுகாப்புக்கான யாழ். மாவட்டப் பிரதிநிதியுமான கலாநிதி நகுலேஸ் கதிர்காமநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்

பேராசிரியர் கணேசலிங்கம் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

விஞ்ஞான வளர்ச்சியை சரியான முறையில் பயன்படுத்தத் தவறியதால் மேற்கத்திய நாடுகள் பொருளாதார அபிவிருத்திக்குத் தீங்கிழைத்து விட்டு இப்போது திக்கிட்டுத் திணறுகின்றன அதே தவறை நாமும் விடக்கூடாது.

அதிக விளைச்சல், திடீர் குபேரராகுதல் என்ற நோக்கங்களை இலக்காக வைத்துச் செயற்படக்கூடாது.

இரசாயன உரங்கள், இரசாயன கிருமி நாசனிகளால் புற்றுநோய் போன்ற ஆபத்தான நோய்கள் உண்டாகலாம்.

யுத்தம் காரணமாக விவசாயத்துக்கும், தொழில்நுட்பத்துக்கும் கொழும்பையும், வெளிநாடுகளையும் தங்கியிருக்காமல் எமது சொந்த, சுதேசிய வளங்களையும், தொழில்நுட்பத் திறனையும் இனங்கண்டுள்ளோம். இதனைத் தொடர வேண்டுமே அன்றி மீண்டும் அவற்றில் அளவுக்கு அதிகமாகத் தங்கி இருக்கும் நிலைக்குச் செல்லக் கூடாது என்று அவர் கூறினார். தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைவர் வண பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் பேசுகையில் கூறியதாவது:-

சூழலைப் பாதுகாப்பதற்கு இரண்டு முக்கிய குணாம்சங்கள் எங்களிடையே வளர வேண்டும். தன்னலமற்ற வாழ்வு, அதாவது மற்றவர்களுக்கு வரும் தீங்குகளை சிந்திக்காமல், உணராமல் வாழும் பழக்கத்தை நாம் மாற்றி பிறர் நலனைக் கருதியும் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். அது முதலாவது குணாம்சம். வாழ்க்கையில் ஒவ்வொரு தனிமனிதனும் ஒழுங்குமுறை பேணுதல் இரண்டாவதாகும்—எனறார்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தமது உரையில் தெரிவித்ததாவது:-

இயற்கையின் சொந்தக்காரன் இறைவன். அதனை நாம் அனுபவிக்க வேண்டுமெனில் பேணிப் பாதுகாக்க வேண்டும். இயற்கையை அழிப்பதற்காக இறைவன் அதனை எமக்குத் தரவில்லை.

இயற்கைக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய கடமை மனிதனுக்கு உண்டு. இயற்கைக்குப் பாதுகாப்பு என்பது அதன் சூழலைப் பாதுகாப்பதாகும்.

சிலவேளைகளில் மரங்கள் மனிதர்களைவிட மகத்துவமானவையாக விளங்குகின்றன. அவை மற்றவர்களுக்குத் துரோகம் செய்யமாட்டா. அவற்றிடம் சூழ்ச்சி இல்லை.

வீதிகளில் நடப்படும் மரங்களை அழிக்காமல் அவற்றுக்கு தண்ணீர் ஊற்றுவதற்கு எல்லோரும் வாளியுடன் செல்லும் நிலை வரவேண்டும்—என்று கூறினார்.

யாழ் மாநகர ஆணையாளர் திரு வே. பொ. பாலசிங்கம், கலாநிதி க. கனகராசா, றோட்டரிக் கழகத் தலைவர் திரு வி. ரி. சிவலிங்கம் ஆகியோரும் விழாவில் உரையாற்றினர்

விழா ஆரம்பமாவதற்கு முன்னர் சூழலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும், மனிதன் என்னென்ன விதமாக சூழலைக் கெடுக்கிறான் என்பதையும் தத்ரூபமாக விளங்கும் வாகன அணிகளும், கலை நிகழ்வுகளும் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. (அ)

### நியமனம்

இலங்கை நிர்வாக சேவையில் நியமனம் பெறுவதற்காக போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற விரும்புவோரின் விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 30ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று அரசாங்க சேவை ஆணைக்குழு தெரிவித்திருக்கிறது.

---

# பண்டிதமணியின் முக்கிய பொக்கிசம் எது என்று கண்டறிய வேண்டும்

பண்டிதமணியின் 94 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

"கற்றார் விழையுங் கற்பக தரு" 'தண்டமிழ் உணர்ந்த பண்டிதமணி' 'வண்டமிழிதமறி பண்டிதமணி' என்று நவாலியூர் சோமசுந்தரப் புலவரால்பாராட்டப்பெற்றவர் பண்டிதமணி எனப்படும் தமிழ்த் தவ முனிவர். பலரும் புகழத் தக்க வகையில் பண்டிதமணி அவர்களிடம் குடிகொண்டு இருந்த முக்கிய பொக்கிசம் என்ன என்பதை ஆராய்ந்து அறிவதே கற்றறிந்தோர் கடன்.

சைவம், தமிழ் இரண்டையும் இருகண்கள் எனப்போற்றி வளர்த்து வந்த பண்டிதமணி அவர்களது ஆழமான அறிவே காரணம் ஆகலாம்.

'பங்கயத்தயனு மாலறியா நீதி' என்ற தொடரினைத் தம் வாழ்க்கை நெறியில் தாரக மந்திரமெனக் கொண்டவர் நாவலர் பெருமான் அவர்கள்.

பண்டிதமணி அவர்களை நீதிவழியில் நெறிப்படுத்திய பெருமை நாவலர் பெருமானால் அமைக்கப்பெற்ற வண்ணை காவிய பாடசாலைக்கே உரியது. சங்கப் பலகை எனப் போற்றப் பெறும் சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசாமிப் புலவர் அவர்களும், நாவலர் பெருமானின் பெறாமகராகிய ஸ்ரீமத் த கைலாசபிள்ளை அவர்களும் பண்டிதமணி அவர்களை அறிவாளி ஆக்கினார்கள். பண்டிதமணியவர்கள் முப்பது வருடங்களுக்கு மேலாகத் தலைமைத் தமிழ் விரிவுரையாளராக இருந்த திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையில் முனிவர் ஒருவர் இருந்தார். அவர் மௌன தவமுனிவர்; அந்தர்முக நோக்குள்ளவர்கள், உப அதிபர் ஸ்ரீ பொ. கைலாசபதி அவர்கள், அவர்களது அருட்பார்வையும் பண்டிதமணி மேற்பட்டது.

கிறிஸ்தவப் பள்ளியிலே ஐந்தாம் வகுப்புவரை படித்து விட்டு, காகித ஆட்டத்திலும், சவாரி வண்டிக்குச் சடைக்கிட்டி பிடித்து ஓடுவதிலும், சிலசமயம் தனது



பண்டிதமணி

இளப்பு வயலில் வேலை செய்வதிலும் காலங்கழித்து வந்த மட்டுவில் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை தமது பதினேழாவது வயதில் நாவலர் பாடசாலையில் சேர்ந்ததுடன் காரைநகர் அருணாசல உபாத்தியாயரின் போதனையின்படி பண்டிதரானார். பயிற்சி பெற்ற ஆசிரியரானார்.

பேச்சாலும், எழுத்தாலும் அறிஞர்களின் உள்ளங்களை எல்லாம் கொள்ளை கொண்ட கணபதிப்பிள்ளைப் பண்டிதர் 1951இல் பரமேசுவரக்கல்லூரியில் சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் எடுத்த தமிழ் விழாவில் 'தமிழ்' என்ற தலைப்பில் பேசினார்கள். உச்சமான பேச்சு. தமிழகத்திலிருந்து வந்தவர்களையெல்லாம் வென்ற பிரசங்கம் அது. தமிழ் விழாப் பிரசங்கம் பண்டிதர் கணபதிப்பிள்ளையைப் பண்டிதமணி கணபதிப்பிள்ளையாக உயர்த்தியது.

மேலும் மேலும் எழுத்துத் துறையையும் பேச்சுத் துறையையும் நன்கு பேணினார்கள். அவரைத் தேடிப் பட்டங்கள் வந்து கொண்டிருந்தன. கல்வித்துறையில் உயர் நிறுவனமான இலங்கைப் பல்கலைக்கழகம் அவரது எழுபத்தொன்பதாவது வயது நிறைவின் போது "இலக்கிய கலாநிதி" என்ற பட்டத்தினை வழங்கிப் பெருமைப்படுத்தியதுடன் தானும் பெருமையுற்றது. இந்தக் கௌரவப் பட்டத்தை முதன் முதற் பெற்றுக்கொண்ட இலங்கைத் தமிழறிஞரும் இவரே.

இத்தகைய உயர்வுகளுக்கெல்லாம் காரணம் என்ன? யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி அருணாசலம் சண்முகதாஸ் அவர்கள் கூறியது போலப் பண்டிதமணி அவர்கள் ஒரு யுக புருஷரல்லவா! ★

அ. பஞ்சாட்சரம்
(செயலாளர், பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜீ.சி.ஈ.(சாதாரணதர) பரீட்சை

# விண்ணப்பப் படிவங்கள் யாழ். வந்து சேர்ந்தன

எதிர்வரும் டிசம்பரில் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப்பரீட்சைக்கான பாடசாலைப் பரீட்சார்த்திகளின் விண்ணப்பப் படிவங்கள் யாழ். கல்வி அலுவலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

கோட்டக்கல்வி அலுவலகங்கள் மூலமாக அவை நாளை முதல் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படும் என யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை —

தொழில்நுட்பக்கல்லூரியின் இறுதிப் பரீட்சைக்கான வினாத் தாள்களும் விமான மூலம் இங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

நாளை தொடக்கம் நடைபெறவுள்ள பரீட்சைகளுக்கான வினாத்தாள்களே இங்கு வந்து சேர்ந்துள்ளன. (இ-5)

## இசை நிகழ்ச்சி

அகில இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் மாதாந்த இசை நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு மன்ற கலாமண்டபத்தில் நடைபெறும்.

இன்றைய நிகழ்வில் வழமையான இசை நிகழ்ச்சிகளுடன் சிறப்பு நிகழ்ச்சியாக பரதநாட்டியம் இடம்பெறும். யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர் வண. அ. இ. பேணாட் அடிகள் தலைமையில் நடைபெறும் மேற்படி விழாவில் பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறைத் தலைவர் பேராசிரியர் சோ. கிருஷ்ண ராசா கலந்துகொள்வார். (த 111)

அறிஞரே வருக! கலைஞரே வருக!
தமிழ் மக்களே வருக!
"இலக்கிய விழா"
அரங்கில் இன்று
(27 – 06 – 1993 மாலை 5-30மணி.)
★ நாதஸ்வர இசை
★ வரவேற்பு நடனம்
★ கவிஞர் மூவரின் கவிதை மழை
★ நடன நாடகம் -

" இலங்கையர்கோன் விலங்கு"
★ சிறப்பு நிகழ்ச்சி ★
தமிழ்ப் பேரறிஞரும், இலக்கியப் புலமையாளரும், தலை சிறந்த விமர்சகரும், கலைவித்தகரும், ஆய்வறிஞரும், சமூகசேவையாளருமாகிய
பேராசிரியர் கா. சிவத்தம்பி
அவர்களைப் பாராட்டி
பொன்னாடை போர்த்து புகழாரம் சூட்டும் வைபவம்.
● பேராசிரியர் தலைமையில் கருத்தரங்கு
★ அனைவரும் வருக ★
— திருமறைக் கலா மன்றம்.
அன்பளிப்பு: உதயன்
(ச-110)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லத்துரை இரத்தினம்

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை இரத்தினம் 26-06-93 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி, மல்லிகாதேவி, தவபாலசந்திரன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரசேகரன் (ஹட்டன்), சண்முகநாதன் (முன்னாள் ஓவசியர்), பாமினி ஆகியோரின் அன்பு மாமியும், சுரேகா, சுரேசன், உசாந்தினி, சுஜன், சுஜித்தா, தாரணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற S. K. கணபதிப்பிள்ளை, மாணிக்கம் பாக்கியம், செல்லையா செல்லம்மா, இராசா இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27-06-93) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மு. ப. 11.00 மணியளவில் பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
செ. சண்முகநாதன் (மருமகன்)
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(26262)

# தி. மு. கழக பிளவின் பின்னணியில் காங்கிரஸ்

## நாஞ்சில் மனோகரன் வெளியேற்றம் குறித்து பி.பி.ஸியில் விமர்சனம்

சென்னை, ஜூன் 27

நாஞ்சில் மனோகரன் வெளியேற்றத்தை அடுத்து தி.மு.கவில் தற்போது உருவாகிவரும் பிளவின் பின்னணியில் காங்கிரஸ் கட்சி செயற்படலாம் என்று பி. பி. ஸியின் சென்னை முகவர் சாம் ராஜப்பா நேற்று பி. பீ. ஸி தாரமிழக்குச் சேவைக்குத் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் அடுத்த பொதுத் தேர்தலில் காங்கிரஸ் தனித்து ஆட்சி அமைப்பது கஷ்டமான தொன்றாகும், ஜெயலலிதா தலைமையிலான அண்ணா தி.மு க. செயலற்றுப்போய் உள்ள தற்போதைய நிலையில் தி.மு.க.வில் பிளவை ஏற்படுத்தி ஒரு பிரிவினரை தன்னுடன் இணைத்துக் கொள்வதுமூலம் அடுத்த பொதுத்தேர்தலில் வெற்றியீட்ட முடியும் என்று காங்கிரஸ் கருதலாம் என்று பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

இதற்கிடையில் தி.மு.கவில் இருந்து வெளியேற்றப்பட்ட நாஞ்சில் மனோகரன் நேற்று மதுரையில் கூட்டம் ஒன்றை நடத்தினார்.

தி. மு. க. தலைமையில் மாற்றம் வேண்டும் என்று இவர் கோரியதே, கட்சியில் இருந்து வெளியேற்றப்படக் காரணமாக அமைந்ததுஎன்று தெரிவிக்கப்படுகிறது.

வை, கோபாலசாமியை கட்சியின் தலைவராக்க நாஞ்சில் மனோகரன் ஆதரவு தேடுவார் என்றும்—

தனது மகன் ஸ்ராலினையே தனது வாரிசாக உருவாக்கும் கருணாநிதியின் முயற்சிக்கு இது இடையூறாகி இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## தொலைத் தொடர்பு ஊழியருக்கு 4 மாதங்களாக சம்பளம் இல்லை

தொலைத் தொடர்புக் கூட்டுத்தாபனத்தின் யாழ் மாவட்ட ஊழியர்களுக்கு கடந்த நான்கு மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை என்று அதிருப்தி தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுக்கான சம்பளக் கட்டுநிதியை கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் இருந்து எடுத்து வருவதற்காகக் கொழும்பு சென்ற யாழ். தொலைத் தொடர்பு கூட்டுத்தாபன உயரதிகாரி ஒருவர் கடந்த 3 மாதங்களாகியும் யாழ்ப்பாணம் திரும்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு சென்ற அந்த அதிகாரியை எதிர்பார்த்து மேற்படி கூட்டுத்தாபன ஊழியர்கள் 85 பேர் இங்கு காத்துக் கிடக்கின்றனர். (த-17)

### குடாநாட்டின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பாகவும், தடை நீக்கப்பட்ட பொருள்களை வடக்கே விரைவாக எடுத்து வருவது குறித்தும் நேற்று விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும் பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவுக்கும் இடையே பேச்சு நடைபெற்றது.

நேற்று மாலை 5 மணிமுதல் சுமார் இரண்டு மணிநேரம் நீடித்த பேச்சின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் ஆகியோரும்—

பிரிகேடியர் ஆனந்தவீரசேகராவுடன் யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரும் பங்கு பற்றினர்.

தடை நீக்கப்பட்ட பொருள்களை விரைவில் அனுப்பிவைக்கும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா பேச்சுக்களின் போது உறுதி அளித்தார் என்று தெரியவருகிறது.

தடை நீக்கம் செய்யப்பட்ட பொருள்களை அனுப்பி வைப்பதற்கான வழிமுறைகள் குறித்து நேற்று நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டதாகவும் தெரியவந்தது.

எனினும் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை பேச்சு வார்த்தை குறித்து உத்தியோக பூர்வமான, ஊர் ஜிதமான தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை. (அ-5-87-15)

### 'றுகுணு' இன்று...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்தியாவசியப் பொருள்கள் ஏற்றப்பட்டு வருவதாகவும்—

இன்று [ஞாயிறு] பிற்பகல் இந்தக் கப்பல் பருத்தித்துறை நோக்கிப் புறப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. (ஒ-5)

### வாகரையில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளது. அண்மையில் இப்பகுதியில் இறால் பிடித்துக் கொண்டிருந்த வயோதிப மாது ஒருவர் படையினரால் சுடப்பட்டார். படுகாயமடைந்த அவர் திருமலை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். (இ-5)

### தமிழக அரசியல் நிலைமை குறித்து

## வாழப்பாடி - சென்னா ரெட்டி நேற்றுச் சந்தித்துப் பேச்சு

சென்னை, ஜூன் 27

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி நேற்று மாநில ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டியைச் சந்தித்து தமிழக அரசியல் நிலைமைகள் குறித்து பேச்சு நடத்தினார்.

திரு. இராமமூர்த்தியுடன் காங்கிரஸ் பிரமுகர்கள் இலரும் சந்திப்பில் கலந்துகொண்டனர். சந்திப்பு சுமார் ஒன்றரை மணிநேரம் இடம்பெற்றது.

இதேவேளை, மத்திய நாடாளுமன்ற விவகார அமைச்சர் திரு. ரங்கராஜன் குமாரமங்கலமும் நேற்று ஆளுநரைச் சந்தித்து பேசியதாகத் தெரிவிக்கப்பட்டது.

## கடும் வெப்பம்: பாகிஸ்தானில் 11 பேர் பலி

இஸ்லாமபாத், ஜூன் 27

கடும் வெப்பம் காரணமாக பாகிஸ்தானின் தென் பகுதியில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் நால்வர் கராச்சியைச் சேர்ந்தவர்கள் மற்றைய எழுவரும் ஹைதராபாத் நகரைச் சேர்ந்தவர்கள்.

மே மாதத்திற்குப்பின்னர் அங்கு ஐம்பதுக்கும் மேற்பட்டோர் தாங்க முடியாத வெப்பம் காரணமாக பலியாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

### நரசிம்மராவ்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அக்கூட்டத்தில் பேசும் போது பிரதமர் ராவ் லஞ்சக் குற்றச்சாட்டை முற்றுமுழுதாக மறுத்தார். அத்துடன் பாரதிய ஜனதா கட்சியையும் கடுமையாகச் சாடிப் பேசினார்.

இதற்கிடையில் —

பிரதமர் நரசிம்மராவ் காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தையும் போபால் நகரில் அவசரமாகக் கூட்டியுள்ளார்.

உயர் அதிகாரம் கொண்ட செயற்குழுக் கூட்டம் போபாலில் கூட்டியிருப்பது காங்கிரஸ் கட்சியில் முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

## பிலிப்பீன்ஸில் கடும் புயல்

மணிலா, ஜூன் 27

பிலிப்பீன்ஸின் தலைநகர் மணிலாவுக்கு வடபிரதேசத்தில் கடும் புயல் வீசி வருவதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

முதலில் கிடைத்த செய்திகளின் படி மூவர் கொல்லப்பட்டனர் என்றும், 18 ஆயிரம் பேர் தமது வீடுகளை இழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ். புனித மரியாள் விளையாட்டுக் கழகம் 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் நடத்திவரும் விலகல் முறை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை புனித மரியாள் வித்தியாலய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ யாழ். திருவள்ளுவர் வி. க. எதிர் புத்தூர் எவரெஸ்ட் வி. க.

★ உரும்பராய் ஒஸ்கார் வி. க. எதிர் ஈச்சமோட்டை வி. க. (உ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிரைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 192/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 27 – 06 – 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org